# பசுமைப் பள்ளித் திட்டம்

## துவக்க விழா

**இடம்: அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கொரடாச்சேரி, திருவாரூர் மாவட்டம்**

**நாள் : 19.01.2023, நேரம்: காலை 9:00 மணி**

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவில் தரமான காய்கறிகள் அரசுப் பள்ளிகளிலேயே விளைவிக்கப்பட்டு கிடைக்கப் பெறுவதற்கென பள்ளிகளில் காய்கறித் தோட்டங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இதனை செயல்படுத்தும் வண்ணம் முதற்கட்டமாக, 500 அரசுப் பள்ளிகளில் பசுமைக் குடில்கள், சூரியசக்தியில் இயங்கும் மோட்டார் போன்றவற்றின் துணையுடன், பல்வேறு நீர்ப்பாசன உத்திகள், பயிரிடும் முறைகள் ஆகியவற்றை மாணவர்கள் கற்றுக்கொள்ளவும், இதன் வழியாக பெறப்படும் காய்கறிகளை மதிய உணவுத் திட்டத்திற்கு சிறப்பான முறையில் பயன்படுத்திக்கொள்வதையும் இலக்காகக் கொண்டு பசுமைப் பள்ளிகள் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அடுத்தக் கட்டமாக அனைத்து அரசுப் பள்ளிகளிலும் காற்கறித் தோட்டங்கள் படிப்படியாக அமைக்கப்படும்.

பசுமைப் பள்ளித் திட்டத்தின்படி தொழிற்கல்வி பாடம் கற்றுத் தரப்படும் பள்ளிகளில் வளாகத்திற்குள்ளாக ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து, வேளாண் ஆய்வகம் ஒன்று பள்ளிகளில் அமைக்கப்படும். சிறு குளத்தோடு கூடிய பசுமைக் குடிலும் பயிரிடுவதற்கான நிலமும் கொண்டது வேளாண் ஆய்வகம். நாட்டிலேயே முதன்முறையாக தொழிற்கல்வியின் ஒரு பகுதியாக இந்த நிலையான வேளாண் ஆய்வகங்களும் தொடங்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பாகும்.

பசுமைப் பள்ளிகள் திட்டத்தின் துவக்க விழா திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஜனவரி 19 அன்று காலை 9 மணிக்கு

நடைபெற்றது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் பங்கேற்று திட்டத்தை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பூண்டி கலைவாணன், பொதுமக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

பள்ளி மாணவர்களுக்கு சூழலியலில் ஆர்வத்தை இந்த பசுமைப் பள்ளித் திட்டம் உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், இதன் மூலம் பயிரிடுதல், வேளாண் முறைகள் போன்றவற்றையும் மாணவர்கள் கற்றுக்கொள்ளவிருக்கின்றனர்.

ஆணையர்
பள்ளிக் கல்வி